செ.வெ.எண்.141 நாள்.12.02.2010

<u>தலைமைச் செயலர் திரு.ஸ்ரீபதி - தமிழகத்தில் நிலவும் காய்ச்சல் பற்றி ஆய்வு</u>

<u>செய்தி வெளியீடு (12.02.2010)</u>

தமிழ்நாட்டில் நிலவிவரும் காய்ச்சல் பற்றி தமிழக அரசுத் தலைமைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர், சென்னை மாநகராட்சி ஆணையர், இயக்குநர் (பொது சுகாதாரத்துறை) இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழக இயக்குநர், தேசிய மரபு நோய் இயல் நிறுவன இயக்குநர் மற்றும் துறையின் உயர் அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார்.

தமிழ்நாட்டில் 2008-ல் 30,43,896 மக்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் 2009-ல் 28,90,181 மக்கள் மட்டுமே காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர். கடந்த டிசம்பர் மாதம் காய்ச்சல் கண்டவர்களின் எண்ணிக்கை 2,93,261 ஆக இருந்தது. சுகாதாரத்துறை எடுத்த கொசு ஒழிப்பு மற்றும் நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளினால் இக்காய்ச்சல் வெகுவாக குறைந்து வருகிறது, 2,18,867 நபர்கள் ஜனவரி 2010-ல் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுள்ளனர். தற்போது இது மேலும் குறைந்து வருகிறது. திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் நகராட்சி மற்று மேலப்பாளையம் பகுதியில் டிசம்பர் மாதம் 2009-ல் காய்ச்சல் கண்டவர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்தது. மதுரை, தேனி, கிருஷ்ணகிரி, கடலூர் ஆகிய மாவட்டங்களிலும் காய்ச்சலால் பலர் பாதிக்கப்பட்டிருந்தனர். காய்ச்சல் குறித்து ஆய்வு செய்வதற்கென புது டில்லி மத்திய மருத்துவ பூச்சியியல் மையம், தேசிய நுண்ணுயிரியல் மையம் பூனே மற்றும் புதுடெல்லி தேசிய பூச்சியினால் பரவக்கூடிய நோய்கள் கட்டுப்பாட்டு மையம், ஆகியோர் அடங்கிய மத்திய குழு தமிழ்நாட்டிற்கு வந்து இப்பகுதிகளில் 500-க்கும் மேற்பட்ட இரத்த மாதிரிகள் பரிசோதனைக்காக எடுத்துச் சென்றனர் இரத்தப் பரிசோதனையில் இவர்களில் எவருக்கும் மலேரியா நோய் இல்லை; சிலருக்கு மட்டும் டெங்கு மற்றும் சிக்குன்குனியா இருப்பது பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், தேசிய நுண்ணுயிரியல் மையம், பூனேயில் (NIV. Pune) இரத்த மாதிரிகளை ரோஸ் ரிவர் (Ross River fever) காய்ச்சல், முரேவேலி காய்ச்சல் (Murry valley fever) மற்றும் சின்ட்பிஸ் காய்ச்சல் (Sindbis fever) போன்ற பல்வேறு வகையான காய்ச்சலுக்கு பரிசோதனை செய்ததில் இவ்வகை காய்ச்சல் எவருக்கும் இல்லை என உறுதி செய்துள்ளனர்.

தமிழ்நாட்டில் கொசுவினால் பரவக்கூடிய நோய்களை கட்டுப்படுத்தவும், கொசுத் தொல்லையை குறைப்பதற்கும் "தீவிர கொசு ஒழிப்புத் திட்டம்" முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கொசுப்புழு ஒழிப்பு பணிகளான தேவையற்ற பொருட்களில் நீர் தேங்கி இருப்பின் அதனை அகற்றுதல், நீர் நிலைகளில் கொசு மருந்து தெளித்தல், நீர் தேங்காமல் இருக்க நகராட்சி நிர்வாகம் மூலமாக வடிகால் அமைத்தல் மற்றும் சுத்தம் செய்தல், முதிர் கொசு ஒழிப்பிற்கான புகை மருந்து அடித்தல் ஆகிய பணிகள் கிராம சுகாதார மற்றும் பஞ்சாயத்து பணியாளர்களை கொண்டு செவ்வனே நடைபெற்று வருகிறது

எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்த தலைமைச் செயலாளர், கொசு ஒழிக்கும் பணியை தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் என்றும், காய்ச்சலால் அரசு மருத்துவ மனைகளுக்கு வரும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படவேண்டும்; வேண்டிய மருந்து மாத்திரைகள் இருப்பில் வைக்கப்பட வேணடும் என்றும் அறிவுறுத்தினார். மேலும் சென்னை மாநகராட்சியில் சில பகுதிகளில் மதுரை மத்திய மருத்துவ பூச்சியியல் வல்லுனர்களுடன் இணைந்து 'ஓவிட்ராப்' என்ற கொசு முட்டை பொறியை பயன்படுத்தி கொசு ஒழிப்பு பணிகள் எடுக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். மேலும் குறுகிய காலத்தில் செயல்படுத்தும் வகையில் கொசு ஒழிப்பு திட்டம் (short term plan) ஒன்றையும், கொசுவை முற்றிலுமாக அழித்திட ஒரு நீண்ட கால திட்டம் (long term plan ) ஒன்றையும் சென்னை மாநகராட்சி தயாரித்து அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

வி.கு சுப்புராஜ்
அரசு முதன்மைச் செயலாளர்

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9